Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# நாட்டுப்புறச் சிற்பங்களும் கட்டமைப்பு முறையும் - ஓர் ஆய்வு

23

முனைவர் ந.லெனின்,
உதவிப் பேராசிரியர் (தமிழ்),
பெரியார் மணியம்மை அறிவில் மற்றும் (நி.நி.ப. கழகம்) தொழில்நுட்ப நிறுவனம்,
வல்லம், தஞ்சாவூர்.
Email Id : lenin260579@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழகக் கோயில்களில் நாம் பலவிதமான தெய்வ உருவங்களைக் காண்கிறோம். வணங்குகிறோம் ஆனால் அவை ஒவ்வொன்றின் பின்னனியிலும் தெரிந்திருக்கும் உண்மைகளைப் பலரும் அறிய வாய்ப்பில்லை. அத்த கைய சில சுவையான செய்திகளை தருவதுதான் நாட்டுப்புறச் சிற்பங்கள் ஆகும். தமிழர்களின் அழகியல் மரபு வழியாக வந்த சிற்பக்கலைகள் அதன் கட்டமைப்புகள் எவ்வாறு வளர்ச்சிப் பெற்றுள்ளது. நமது பாரம்பரிய கோயில்களின் சிறப்புகள் நாட்டுப்புற பண்பாட்டில் தனித்துவம் மற்றும் நாட்டுப்புற சிற்பங்கள் சிற்ப கலை அறிவு, தொன்மம், குறியீடுகள் போன்றவை விளக்கப்படுகின்றது.

**முன்னுரை**

நாட்டுப்புற கலை மக்களிடம் பொதிந்து கிடக்கின்ற பண்பாட்டு உணர்வுகளை வெளிக்கொணர்வது ஆகும். கலை என்றால் உணர்ச்சிகளைக் கவர வேண்டும் களிப்பூட்டி அறிவினைப் போய்க் கவ்வ வேண்டும். நிலை கொள்ளச் சிந்தனையை நிற்கச் செய்து, நீதி நெறி தெய்வ நினைப்பூட்ட வேண்டும். ஏதேனும் ஒன்றை வெளியிடுவதாக அமைந்திருக்கும். எனினும் முகத்திலோ, பேச்சிலோ அல்லது செயலிலோ தோன்றும் ஒரு வித உணர்ச்சி தன்மை போன்றவற்றைக் குறிப்பிடுவதாக அமைகிறது. அந்த வகையில் நாட்டுப்புற சிற்பங்கள் அதன் கட்டமைப்புகள் எவ்வாறு வெளிப் படுகின்றது. என்ற வினாவிற்கு இடை காணும் நோக்கில் இக்கட்டுரை ஆராயப்படுகிறது.

**நாட்டுப்புற சிற்பங்கள்**

காலம் காலமாக நம் முன்னோர்கள் நம்பிக்கையின் வேராக களி மண்ணை கொண்டு உருவங்கள் செய்வது பிள்ளையார், வீரனார், பேச்சியம்மன் போன்ற உருவங்களை செய்வது வயல் புறங்கள் மற்றும் வீட்டு புறங்களில் வழிப்படுகின்ற முறையை இன்னும் கையாளப்பட்டு வருகின்றதை உணர முடிகின்றது. அந்த வகையில் தொழில் கலைஞர்களும் சிற்பங்களை உருவாக்கும் பணியிலும் இருந்து வருகின்றனர். சிவன் சிலைகள், முருகன் சிலைகள் போன்றவற்றை உருவாக்கி விற்பனை நோக்கிலும் இருந்துள்ளனர்.

தமிழகத்தை பொறுத்த அளவில் சங்க காலம் தொட்டே முப்புரம் எரித்த சிவன் பற்றிய செய்திகள் இலக்கியங்களின் முதன்மைச் சங்கத்தில் திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளே கலந்து தமிழாய்ந்ததாகக் கூறப்படுவதுண்டு. தமிழ்மொழிக்குத் தெய்வத்தன்மை கொடுப்பதாகவும்

தொன்மையை சுட்டுவதற்காகவும் இவ்வாறு கூறப்பட்டிருக்கலாம்.

ஓங்குமலைப் பெருவிற் பாம்பு ஞாண் கொளீஇ
ஒருகணை கொண்டு மூவெயிலுடற்றிப்
பெருவிறல் அமரர்க்கு வென்றி தந்த
கறை மிடற்றண்ணல்

(புறநானூறு பாடல் 55)

என்று முப்புறம் எரித்த செய்தி புறநானூற்றில் பேசப்பட்டாலும் தமிழ் குடிகளாக உள்ள நாட்டுப்புற மக்கள் அதீத நம்பிக்கையும் கொண்டு இருந்துள்ளனர்.

**சிற்ப கலைக்கு வேண்டிய அறிவு**

சிற்ப மொன்றை உருவாக்க விரும்பும் கலைஞனானவன் அதன் அடிப்படைகள் பற்றிய அறிவுடையவனாக இருத்தல் வேண்டும் அடிப்படைகள் ஆறு என பிரிக்கலாம்.

1. சிற்பத்திற்குரிய கற்கள் பற்றிய அறிவு
2. சிற்பம் செதுக்கலிற்கான ஆரம்ப உருவரைகள்
3. செதுக்குதல்
4. அங்கங்களின் உருவமைப்பு
5. பாவ நிர்ணயம்
6. ஒருங்கிணைத்தல் என்பனவாம்

ஒரு சிற்பிக்கு இருக்க வேண்டிய முக்கியமான அடிப்படைகள் சிற்ப அறிவுகள் நேர்கோடு வட்டம், பிரபஞ்சத்தின் கட்புலனாகக் கூடிய அனைத்து உருவங்கள், தெய்வ படிமத்தின் உருவ ஒழுங்கமைப்பு போன்றவை ஆகும்.

இலக்கியத்தில் வர்ணிக்கும் காட்சி அமைப்பைச் சிற்பக் கலைஞன் தான் உணர்ந்து அதனை சிற்பமாக படைக்க முற்படுகிறான். இவன் படைத்த சிற்பப் பொருட்கள் மற்ற அனைவரையும் அழகியலோடு மகிழவும் திருப்தி படுத்தவும் செய்கின்றன என்பதை அறிய முடிகின்றது.

**சிற்பங்களும் குறியீடுகளும்**

சிற்பங்களில், இந்தியக்கலை வரலாற்றிலும் குறியீடுகள் ஆதி காலம் தொட்டே இருந்து வந்துள்ளதை அறியலாம். தமிழகத்தில் தற்கால சிற்பிகளும் இதைப் போன்று குறியீடு உணர்த்தும் மரபு சிற்பங்களைச் செய்கின்றனர். சிற்பங்களின் கட்டமைப்புகள் நேர்த்தியாக அமைதல் வேண்டும். யானை, மேகம் ஆகியன மழை மற்றும் வளமையையும், குதிரையானது மன்மதன்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513


வருகையையும், அன்னம் ரதியின் வருகையையும் குறிப்பதோடு இவை வளமையையும், செழுமையையும் குறிப்பதாகும்.




**நாட்டுப்புறச் சிற்பக்கலைகள்**

தமிழகத்தில் நாட்டுப்புறச் சிற்பக்கலைகள் என்பது மக்களின் தேவைக்காகவும் மற்றும் வழிபாட்டிற்கும் ஏற்ப பயன்பாட்டில் இருக்கின்றன. அந்த வகையில் அன்று முதல் இன்று வரை சுடுமண் சிற்பங்கள் பெரிதும் பயன்பாடாக உள்ளன. இதைப் போன்று கல்சிற்பங்கள், சுதைப் சிற்பங்கள் போன்றவைகளும் பயன்பாட்டில் உள்ளன. சுடுமண் சிற்பங்கள் தமிழகத்தில் நாட்டுப்புற கலைஞர்களால் ஐயனார், அம்மன், யானை, குதிரை, மாடு மற்றும் நாய் போன்ற சிற்பங்களும் தற்போது தேவைக்கு பயன்படும் சுடுமண் சிற்பங்களை செய்து வருகின்றனர்.

நாட்டுப்புறச் சிற்பக் கலையில் உள்ள எல்லா சிற்பங்களின் ஊடகங்கள் வேறு விதமாக இருந்தாலும் அது நாட்டுப்புறத் தேவைக்கும் மற்றும் வழிப்பாட்டிற்கும் ஏற்றவாறும் ஒன்றுபட்டுக் காணப்படுகிறது. நாட்டுப்புறச் சிற்பக் கலையில் அழகியல் தன்மை, குணங்கள், வெளிப்பாடு என்பதும் ஒரு அழகியல் கூறுகளுடன் ஒன்றுபட்டுக் காணப்படுகின்றது.





சம நிலையில் சிற்பக்கலைப் படைப்பைச் செய்யும்போது சமநிலையில் அழகியல் தன்மை கொடுக்கிறது கலைஞன் உருவத்தின் பரிணாமத்தையும் மற்றும் உணர்ச்சியை இணைத்த சிற்பக்கலை படைப்பை செய்யும்போது முக்கிய எண்ணங்களை வெளிப்படுத்துவதற்கான வழிமுறைகள் முதன்மை படுத்தி கலைஞன் படைக்கின்றான். கி.பி. 6 – ம் நூற்றாண்டுலிருந்து முன்பும் மரபு கோயில் சிற்பக் கலையாலும், நாட்டுப்புற சிற்பக்கலையாலும் பல்வேறு வடிவ அமைப்புகள் இருந்துள்ளது.

**உருவ அமைதிகளில் வளர்ச்சி**

சிற்பங்களின் முகப்பொலிவு சதைப்பற்றாகவும், சற்று அகலமாகவும் அமைந்துள்ளன. மூக்கு தட்டையாக அமைத்தல் இருந்து மார்போடு ஒட்டியுள்ளது. பல்லவர் சிற்பங்களில் முகத்துக்கும் மார்புக்கும் இடையில் கழுத்து அகலமாகத் தெரியும் அந்நிலை இங்கு இல்லை உடல் அமைப்புச் சீராகவும், நியாயமான திடத்துடனும் பெரும்பாலும் நேராக நின்ற நிலையிலும் அமைந்துள்ளன. இவைபோன்று தான் நாட்டுப்புற தெய்வ உருவங்களும் மாறும். தாய்த்தெய்வம், விநாயகர், முருகன், பைரவர் போன்ற பரிகாரத் தெய்வங்களை வணங்கும் வழக்கம் பெருகிறது. இதற்கு காரணம் வேளாண் குடிகளும் கைவினைஞர்களும் எடுத்துக் கொண்ட கூட்டு முயற்சி ஆகும். உருவங்களை வரைவதில் குலாளர் அவர்களின் பங்களிப்பு முக்கியமானவை

ஆகும். இவர்கள்தான் நாட்டுப்புற கோயில்களுக்கு நேர்த்தியான கட்டமைப்போடு சுடுமண் சிற்பங்களை செய்து அளிக்கின்றனர்.

சிற்பக்கலை, ஓவியக்கலை போன்றவற்றில் கலைஞர்கள் படைப்புகள் அனைத்திலும் ஒருங்கிணைந்து முடிந்தளவில் நல்ல முடிவுகளைத் தர வேண்டும் என்று விரும்புகின்றனர். அந்த வகையில் ஒரு நாட்டுப்புற மட்பாண்டம் உருவத்தின் பரிமாணத்தையும் மற்றும் உணர்ச்சியையும் இணைத்து அலங்காரத்தை விரும்புகின்றான். எடுத்துக்காட்டாக நாட்டுப்புறக் கலைஞர் செய்யும் சுடுமண் குதிரை சிற்பத்தில் உள்ள அலங்காரத்தையும் ஒருமையில் அமைத்து படைப்பாளனை சிறப்படையும் விதமான மேம்மைப்படுத்துகிறது.

**முடிவுரை**

நாட்டுப்புற சிற்பங்கள் மற்றும் கட்டமைப்பு முறைகள் பெரும்பாலும் இனக்குழுக்கானது உணவு சேகரிக்கும் நிலையில் வாழ்ந்த மக்கள் தங்களை வன விலங்குகளிடமிருந்து காக்கின்ற ஆற்றல் மிக்கவர்களாக கலைஞர்கள் இருந்துள்ளனர்.

“கலை கலைக்காகவே” என்ற கோட்பாடு 18-ம் நூற்றாண்டில் தத்துவஞானிகாண்ட் என்பவரால் கூறப்பட்டது.கலையில் நாட்டுப்புறக்கலை தொன்மையானது அதன் வடிவமும் உள் கட்டமைப்பும் நேர்த்தியானவை. ஆதலால் சிற்றறூர் புறங்களில் மண் உதவியோடு இன்றும் கலைப்பொருட்கள் மற்றும் உருவங்கள் செய்யப்பட்டு வருகின்றது. எனவே, நாட்டுப்புற கலை மற்றும் கலைஞர்களை போற்றிவளர்பதோடு மட்டு மல்லாமல் அவர்களின் கலை உணர்வையும் போற்ற வேண்டும்.

**துணைநூற்ப் பட்டியல்கள்**

1. முனைவர் சுப்பிரமணியன். அ.பெ – அழகியல் ஒரு புதிய பார்வை, 2005 – சந்தியா பதிப்பகம், சென்னை.
2. முனைவர். திருநாவுக்கரசு. சு – தமிழர் சிற்பக்கலையில் அழகியல் கோட்பாடுகள் - 2018, தாழி புத்தகக்கடை 33, செங்குந்தர் வீதி புதுச்சேரி - 5.
3. முனைவர். சாந்தலிங்கம். சொ – தமிழர் பண்பாட்டுப் பதிவுகள் - 2013 ஜீபிடர் பிரிண்டர்ஸ் 3514 சிவன் கோயில் தெரு, சென்னை – 094.

**குறிப்புகள் :**

புறநானூறு பாடல் – 55
சிலம்பு - 102 நீர்ப்படை 74
கலித்தொகை - 23.